TAMIL NADU
GOVERNMENT GAZETTE
PUBLISHED BY AUTHORITY

**No.13] CHENNAI WEDNESDAY, APRIL 13,2011**
**Panguni 30, Thiruvalluvar Aandu-2042**

# Part VI --- Section 2

*Notifications of interest to a section of the public issued by*
*Heads of Departments, etc.*

## *NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.*

# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

**( அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./SC/ 7– 25, 18–03–2011 நாளிட்டது )**
(ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டதன் தமிழாக்கம்)

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவின்படி தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பைக் குறித்துரைத்துள்ளது என்பதாலும், மற்றும் 2004 செப்டம்பர் 1ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பகுதி VI –பிரிவு 2இல் வெளியிட்டுள்ளது என்பதாலும்,

மற்றும் தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கு ஒருசில திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும், அத்தகைய திருத்தங்கள் முந்திய வெளியீட்டின் வரையறைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் மற்றும் அதற்கிணங்க முந்திய வெளியீடு செய்யப்பட்டுள்ளது என்பதாலும்,

தற்போது, அதற்காக, 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 50ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் 181ஆம் பிரிவின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப்பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், இதன்மூலம், (இதன்பின்பு இதில் முதன்மை விதித்தொகுப்பு என்று குறிப்பிடப்படும்) தமிழ்நாடு மின்வழங்கல் விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களை குறித்துரைத்துள்ளது, அதாவது :–

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம் :**

(அ) இந்த விதித்தொகுப்பு, 2011ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்வழங்கல் (திருத்தம்) விதித்தொகுப்பு என்று வழங்கப்படும்.

(ஆ) இது, தமிழ்நாடு அரசிதழில் அது வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. முதன்மை விதித்தொகுப்பின் 17ஆம் கூறின் திருத்தம் :**

முதன்மை விதித் தொகுப்பின் 17ஆம் கூறில், 8ஆம் உட்கூறு மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பின்பு, பின்வரும் உட்–கூறு புதுத்தப்படுதல் வேண்டும், அதாவது : –

"*9(அ) ஒரு வளாகத்திலுள்ள மின்னிணைப்புகளைப் பொறுத்தமட்டில், அது, எந்த வகையான நிலுவைத்தொகைகளையும் செலுத்தத் தவறுவதனால் மின்னிணைப்பு துண்டிக்கப்பட்டுள்ள போது / அகற்றப்பட்டுள்ளபோது அத்தகைய வளாகத்தினை, ஒன்று விலைக்கு வாங்குதல் அல்லது உரிமைமாற்றம் அல்லது குத்தகை அடிப்படையின் மூலம் பிற நபர்களால் அத்தகைய மின்னிணைப்புகளுக்கு மறு இணைப்பு அல்லது புதிய மின்னிணைப்புகள் கோரும்போது, மின்பகிர்மான உரிமம்தாரர் அந்த விண்ணப்பதாரரால், அத்தகைய வளாகத்திற்குச் சுட்டிக்காட்டப்பட்ட நிலுவைகளைச் செலுத்திய பின்பு மட்டுமே, அத்தகைய வளாகங்களில், அத்தகைய மின்னிணைப்புகளுக்கு மறுபடியும் இணைப்பு வழங்குதல் அல்லது, நேர்வுக்கேற்ப, புதிய மின்னிணைப்புகளை வழங்குதல் வேண்டும் :*

*ஆனால், அத்தகைய வளாகம் சட்டப்படியாக உட்–பிரிவாகப் பிரிக்கப்படுமானால், அத்தகைய வளாகத்திற்காகச் சுட்டிக் காட்டப்பட்டவாறு கொடுபடவேண்டிய நிலுவைகள், அத்தகைய உட்–பிரிவில் உள்ளடக்கப்படும் பகுதிக்குரிய விகிதத்தில் பிரிக்கப்படுதல் வேண்டும். அவ்வாறு உட்–பிரிவாகப் பிரிக்கப்பட்ட வளாகத்தின் பகுதி எதற்கும் புதிய மின்னிணைப்பானது, அவ்வாறு உட்–பிரிவாகப் பிரிக்கப்பட்ட வளாகத்திற்குச் சுட்டிக்காட்டப்பட்டவாறு கொடுபடவேண்டிய நிலுவைகளின் பங்கு, அந்த விண்ணப்பதாரால் உரியவாறு செலுத்தப்பட்ட பின்பு மட்டுமே, வழங்கப்படுதல் வேண்டும். மின்பகிர்மான உரிமம்தாரர், அவ்வாறு உட்–பிரிவாகப் பிரிக்கப்பட்ட வளாகங்களின் மற்றொரு பகுதிக்குச் சுட்டிக்காட்டப்பட்டவாறு நிலுவைகள் செலுத்தப்படவில்லை என்ற அடிப்படையில் அவ்வாறு உட்–பிரிவாகப் பிரிக்கப்பட்ட வளாகத்தின் விண்ணப்பதாரருக்கு மின்னிணைப்பு வழங்குவதை மறுத்தலோ உரிமம்தாரர் அத்தகைய விண்ணப்பதாரர்களிடமிருந்து அத்தகைய பிற பகுதி(களின்) கடைசியாகச் செலுத்தப்பட்ட பட்டியல்களை பதிவுருக்களாகக் கோருதலோ ஆகாது.*

*(ஆ) உரிமம்தாரரின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய மின்னிணைப்புகளில் மறு இணைப்பு பெறுவதற்கான அல்லது புதிய மின்னிணைப்பைப் பெறுவதற்கான கட்டணங்களோடு தாமதத் செலுத்த உபரிக் கட்டணம் (BPSC) உள்ளடங்களாக கொடுபட வேண்டிய மொத்த நிலுவைத் தொகையை தவணைகளில் செலுத்துவதற்கும், அவற்றில் 40 விழுக்காடு செலுத்துவதன் பேரில் அந்த மின்னிணைப்பை பயன்படுத்துவதற்கும், அத்தகைய விண்ணப்பதாரரை அனுமதிக்கலாம். கொடுபட வேண்டிய தொகையில் மீதம் உள்ள 60 விழுக்காடு 10 மாதாந்திர தவணைகளில் வசூலிக்கப்படலாம்.*

*(இ) அத்தகைய வளாகத்தினை விலைக்கு வாங்க ஆர்வம் கொண்டவர், மின்பகிர்மான உரிமம்தாரரிடம், அந்த வளாகத்தின் உரிமையாளர் / குடியிருப்பவர் கொடுபடவேண்டிய நிலுவையாகவுள்ள மின்கட்டணங்கள் பற்றிய விவரங்களைக் கோரினால், மின்பகிர்மான உரிமம்தாரர், அப்போதைக்கு நடைமுறையிலுள்ள பல்வகைக் கட்டணங்கள் தொடர்பான மின்கட்டணமல்லாத, ஆணையத்தின் ஆணையில் குறிப்பிடப்பட்ட கட்டணங்களைச் செலுத்தும் பட்சத்தில், அத்தகைய விவரங்களை அளித்தல் வேண்டும் ”.*

*(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)*

**ரா. வெ. ராஜா**
செயலாளர்